புதுச்சேரி அரசு
கூடுதல் வேளாண் இயக்குனர் அலுவலகம் (தோட்டக்கலை)
தாவரவியல் பூங்கா, புதுச்சேரி

எண்.445/கூ.வே.இ.(தோ.கலை)/வே.அ.(கா)/2017-18 தேதி: 20.07.2017

# அறிவிப்பு

புதுவை பகுதி வேளாண் பெருமக்களே!

புதுவை அரசு வேளாண்துறை கீழ் இயங்கும் கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை), அலுவலகத்தின் மூலம் ராஷ்ட்ரிய கிரிஷி விஞ்ஞான் யோஜனா என்ற மத்திய அரசின் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இதன் ஒரு அங்கமான உபதிட்டம் **"ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாமல் 50 சதவிகித மானியத்தில் பந்தல் காய்கறி சாகுபடி செய்வதற்கு வேண்டிய நிரந்தர பந்தல் அமைப்பதற்கான திட்டம்"** நடப்பு நிதி ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தினை அமுல்படுத்த திட்ட இலக்காக 5 ஏக்கர் என்ற அளவில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதன் கீழ் பயனடைய விரும்பும் விவசாயிகள் அதற்குண்டான விண்ணப்ப படிவத்தை மேற்கண்ட அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து கோரப்பட்ட தக்க ஆவணங்களுடன் 10.08.2017ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. முன் விண்ணப்பித்த விவசாயிகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இவண்,
(சீ. ஜெயசங்கர்)
கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை)